செ.வெ.எண்: 343 நாள்: 29.05.2020

**இ - பாஸை தவறாக பயன்படுத்திய மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டம், வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்கான இ - பாஸை தவறாக பயன்படுத்திய மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது :-

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், எஸ்.புதூர் கிராமத்தைச் சேர்ந்த ஜெனரால்டு என்பவர் நாகப்பட்டினத்திலிருந்து கார் மூலம் சென்னை செல்வதற்காக வாங்கிய இ-பாஸை சென்னையிலிருந்து திரும்பும்போது கும்பகோணத்தை சேர்ந்த நபர்களை அழைத்து வருவதற்காக தவறாக பயன்படுத்தியுள்ளார். இதைப்போன்று, கும்பகோணம் பகுதியைச் சேர்ந்த பிளக்ஸ் நிர்மல் மற்றும் சங்கர் ஆகிய இரு நபர்கள் சென்னை செல்வதற்காக வாங்கிய இ-பாஸில் அனுமதிக்கப்பட்ட நபர்களை விட இரண்டு நபர்கள் கூடுதலாக அழைத்துச் சென்றுள்ளனர். மேற்காணும் காரணங்களுக்காக, மூன்று நபர்களும் காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, ஊரடங்கு காலத்தின்போது வெளி மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களுக்கு சென்றிட வழங்கப்படும் இ - பாஸ்களை தவறாக பயன்படுத்துபவர்கள் மீதும், கூடுதலாக ஆட்களை ஏற்றி செல்பவர்கள் மீதும், இ - பாஸில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.